என்னிடம் வந்து பணி முடியவில்லை என்று கூறி உள்ளார். ஆகவே பணி முடிவடையாமல் இருந்தால் இனியாவது மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் கவனம் செலுத்தி இதை முடித்துக்கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 20 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு உயர்நிலை மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியொன்றை அமைத்திருக்கிறார்கள். ஆனால் கிணற்றில் தண்ணீர் வற்றிவிட்ட காரணத்தினால் மறுபடியும் 6,500 ரூபாய் செலவில் இந்தக் கிணற்றைத் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சீர்பருவச் சாலைகள்.

*335 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிற்றூர்களுக்கு சீர்பருவச் சாலை அமைக்கும் திட்டத்தின்கீழ் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும், கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும் எடுத்து நிறைவேற்ற உத்தேசித்துள்ள சாலைகள் எவை, எவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒரு விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் 21 வேலைகள் எவை, எவை எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று விவரம் தரப்பட்டிருக்கிறது. அண்மையில் பெய்த மழையால் பல சாலைகள் பெயர்ந்து உடைப்பெடுத்து இருக்கிறது. தொடர்புச் சாலைகளை விரைவாக ஏற்படுத்துவதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கெனவே எடுத்துக்கொண்ட திட்டங்களுக்கே நிதிப் பற்றுக்குறை இருக்கிறது. நிதி நிலைமை சீர்பட்டவுடன் இந்த வேலைகள் துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* 578–580 -ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1975 நவம்பர் 12]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

அறிவிப்பு.

(3) ஓர் உரிமை மீறல் பிரச்னையை அடுத்த கூட்டத் தொடரில் எடுத்துக்கொள்வதுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் விதி 184-ன்கீழ் ஒரு உரிமை மீறல் பற்றிய பிரச்னையைக் கொண்டுவந்துள்ளார்கள். அதைப் பரிசிலித்துப் பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : உரிமை மீறல் பிரச்னையைப் பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்றால் இன்றைக்குக் கடைசி நாள்; பிறகு என்று சொன்னால் இன்றைக்கேயா அல்லது பிறகா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டசபை இதோடு முடிவு அடைந்துவிடாது. அடுத்த சிட்டிங் இருக்கும். போது பார்த்துக்கொள்ளலாம். Let me consider it. Let me go through it and consider it.

* THIRU A. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, the Proviso to Rule 184 of the Assembly Rules says :

"Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice."

Again, Sir, Rule 186 says :

"A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon :

Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business."